# 1. பொருளாதாரப் பிரச்சினைகளும் கொள்கைகளும் - 1966.

## முன்னுரை

1966ம் ஆண்டில் பொருளாதார நிலைமையில் மிகவும் உறுத்தும் அம்சமாக ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட கூரிய வீழ்ச்சி அமைகின்றது. ஏற்றுமதி வரவுகள் சென்ற ஆண்டில் இருந்த நிலையிலிருந்து கூர்மையாக வீழ்ச்சியுற்றது மட்டுமன்றி, 1958ஆம் ஆண்டின் பின்னர் பெறப்பட்ட ஆகக் குறைந்த மட்டத்தினையும் அடைந்தன. ஏற்றுமதித் துறையின் திருப்தியற்ற இயக்கத்தினாலே, பொருளாதார வளர்ச்சியானது பெருமளவில் பிற்போடப்பட்டது.

1966இல் பதியப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு விகிதமானது, முந்திய வருடத்தினதிலும் குறைவாக இருந்தது. 1965இல் நடைமுறைச் சினைக்கொள் விலைகளின் படியான மொத்தத் தேசிய உற்பத்தி 2·9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 1966இலே இவ்வதிகரிப்பு 1. 3 சதவீதமாக அமைந்தது மட்டுமன்றி, அவ்வருடத்திற்கான அதன் அதிகரிப்பு விகிதமும் 1964ஆண்டினதிலும் பார்க்கக் குறைவாக இருந்தது. உண்மையில் 1966இல் பதியப்பட்ட மொ. தே. உ. அதிகரிப்பு விகிதமானது 1961-இன் பின்னர் பதியப்பட்ட ஆகக்குறைந்த விகிதமாக இருந்தது.

உண்மை நியதியின்படி, அதாவது நிலையான (1959) விலைகளின்படி, 1966 இல் ஏற்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு 1. 6 சதவீதமாக மட்டுமே இருந்தது. இது 1964, 1965ம் ஆண்டுகளில் முறையே ஏற்பட்ட அதிகரிப்புகளாகிய 4·6 சதவீதத்துடனும் 1·8 சதவீதத்துடனும் ஒப்பிடற்பாலது. 1966இல் சனத்தொகை அதிகரிப்பானது, 1965 இனது 2. 4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.3 சதவீதமாக உள்ளது. சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பைக் கணக்கெடுப்பின், தனியாளுக்கான மொ. தே. உ., நடைமுறை விலைகளின்படி 1.0 சதவீதத்தாலும் உண்மை நியதியின்படி 0.7 சதவீதத்தாலும் குறைந்துள்ளது.

1965ம் ஆண்டிற் போலவே, பொருளாதாரத்தின் இத் திருப்தியற்ற இயக்கமானது நாட்டினது கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்ட காரணிகளினாலேயே பெருமளவு ஏற்பட்டது. இதற்கும் பொறுப்பான முக்கிய காரணி ஏற்றுமதிகளிலிருந்து பெற்ற வருவாய்களின் வீழ்ச்சியே. பாதகமான கால நிலை, தொழிலாளர் திருப்தியீனம், தேயிலையின் விலையில் ஏற்பட்ட கணிசமானளவு வீழ்ச்சி ஆகியனவற்றின் விளைவால், தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமானம் மட்டுமே 1965இற் குரியதிலிருந்து ரூ. 1830 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. மூன்று பிரதான தெங்குப் பொருட்களின் உற்பத்தியும் வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டது. மறுபுறத்தில் இரப்பர் ஏற்றுமதி வருவாய்கள், அதிகரித்த உற்பத்தியின் பயனால், அதிகரிப்பைக் காட்டின. இவ்வியக்கங்களினது ஒருமித்த விளைவாக 1966இல் ஏற்றுமதித் துறையின் தேறிய உற்பத்தியானது 10.3 சதவீதத்தால் குறைவுற்றது. இதற்கெதிராக கடந்த வருடத்தில் அது 2·4 சதவீத ஏற்றத்தைக் காட்டியிருந்தது.

சென்மதி நிலுவை நிலைமையானது இறக்குமதிகளின் உயர்ந்த விலைகளாலும், ஏற்றுமதிகளின் குறைந்த விலைகளாலும் பாதிக்கப்பட்டது. 1965 இல் 1·2 சதவீதத்தால் சிறிதளவு திருத்தம் காட்டிய வர்த்தக மாற்று விகிதமானது 1966இல் 13·1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. வெளிநாட்டுக் கொடுப்பனவுகளில் வருடம் முழுவதும் அமுக்கங்கள் தொடர்ந்திருந்தன. கட்டுப்பாடான ஒரு அந்நிய செலாவணி வரவுத் திட்டமும், அந்நிய கடன்பாட்டில் ரூ. 2280 இலட்சம் அதிகரிப்பும் இருந்த போதிலும், மொத்த வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் ரூ. 1220 இலட்சங்களால் குறைவுற்றுள்ளன. வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களிலிருந்தும், வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்தும், அந்நிய உதவிகளிலிருந்தும், நிதியீட்டம் செய்யக் கூடிய நிலையில் இறக்குமதிகளை

வைத்திருக்கும் நோக்கத்துடன், வருடப்போது வெளிநாட்டுச் செலாவணி வரவு செலவுத் திட்டத்தில் முன்னர் ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 22340 இலட்சமானது (''வெளிநாட்டுச் செலாவணி தேவையற்ற'' இறக்குமதி உத்தரவுச்சீட்டுகளும், திட்ட உதவியும் நீங்கலாக) ரூ. 21860 இலட்சமாக குறைக்கப்பட்டது. உண்மையில் வழங்கப்பட்ட உத்தரவுச்சீட்டுக் களின் பெறுமானம் இத்திருத்தியமைக்கப்பட்ட ஒதுக்கீட்டிலும் ரூ. 1000 இலட்சம் குறைவாக அமைந்தது.

அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் விரிவுத்தன்மைத்தான நிதியீட்டத்தாலும், தனியார் துறைக்கான வர்த்தக வங்கியின் அதிகரித்த கொடுகடனாலும் ஓரளவு தேற்றப்பட்ட சென்மதி நிலுவையின் சமமின்மையானது 1965 இல் பெறப்பட்ட சிறிதளவு விரிவிற்கெதிராக, 1966ல் தேறிய பணநிரம்பற் சுருக்கத்தை விளைவித்தது. 1958 தொட்டு தொடர்ந்து அதிகரித்து வந்த பணநிரம்பலானது 1966இல் ரூ. 568 இலட்சத்தால் குறைந்தது. ஆயினும் இப்பண நிரம்பலின் வீழ்ச்சிப் போக்கு வருடம் முழுவதிலும் தொடர்ந்து அமையவில்லை. வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் ஏற்பட்ட ரூ. 493 இலட்ச வீழ்ச்சியின் பின் அது ரூ. 906 இலட்சத்தால் விரிவடைந்து இற்றை வரையான உச்ச நிலையை 1966 யூலையில் அடைந்தது. அதன்பின் ஒரு கூரிய வீழ்ச்சி ஏற்பட்டது. எனவே, முழு வருடத்திற்குமான பண நிரம்பலில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பினும், உண்மையாகப் பெறப்பட்ட சுருக்கம் வருட ஆரம்பத்திலும், பின்னரையாண்டு காலப் பகுதியிலுமே ஏற்பட்டதாகும். இப்படியிருந்திராதிருப்பின், பொருளாதாரத்தில் பணச் சுருக்கநிலைமைகள் மேலும் உறுத்தமான விதத்தில் தோன்றியிருக்கக்கூடும்.

பணத்துறையிலே ஏற்பட்ட மிதமான சுருக்கம், இறக்குமதியானதும், உள்நாட்டிலுற்பத்தி செய்யப்பட்டதுமான பொருட்களின் நிரம்பல்களின் அதிகரித்த கிடைப்பனவுடன் சேர்ந்து, உள்நாட்டு விலை மட்டத்தின் மீதான அமுக்கத்தை தளரச்செய்தது. கூர்மையாக அதிகரிக்கும் விலைகளைக் கொண்ட 1961 தொட்டு ஆன காலப்பகுதியைத் தொடர்ந்து, 1965 முடிவில் விலைகளில் ஓரளவு ஸ்திரத்தன்மை எய்தப்பட்டது, இவ்விடத்தில் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். இப்போக்கு 1966இலும் தொடர்ந்து நீடித்தது. இவ்வருடத்தில், உண்மையில், கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியினால் அளவிடப்பட்டதான விலைகளிலே ஒரு சிறு வீழ்ச்சி ஏற்பட்டது.

ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ந்திருப்பினும், உள்நாட்டு உற்பத்தியிலும், இறக்குமதி களிலும் ஏற்பட்ட உயர்வை, வெளிநாட்டு உதவி மூலம் கிடைக்கப்பெற்ற அந்நிய வளங்களாலும், வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களைக் குறைத்ததாலுமே பெறமுடியுமாகயிருந்தது. வெளிநாட்டுச் செலாவணி வரவு செலவுத் திட்டத்தில், ஏனைய மாற்றங்களுக் கிடையில், தயாரிப்புத் தொழிலிற்கும், வளமாக்கிகளுக்கும், போக்குவரத்துச் சாதனங் களுக்கும் கூடிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. உணவு இறக்குமதிகளுக்கென வெளிநாட்டுச் செலாவணி மீது ஏற்படும் அமுக்கத்தை தளர்த்தும் நோக்கத்துடன், விவசாயத்தில் வெகு சீக்கிரத்தில் பயனளிக்கும் திட்டம் ஒன்றினை ஆரம்பிக்க தீவிர முயற்சிகள் எடுக் கப்பட்டன. இம்முயற்சிகளின் பலனை நிர்ணயிப்பதற்கு காலம் உள்ளதெனினும், உணவு உற்பத்தி பெருக்க முயற்சிக்கு சமூகத்திடையே, பொதுவாகக் குறிப்பிடத்தக்க வரவேற்பு கிடைத்துள்ளது.

### (1) 1966-ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி

1966ம் ஆண்டில் நடைமுறைச் சினைக் கொள்விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தியானது 1·3 சதவீதத்தால் ரூ.75291 இலட்சத்திற்குயர்ந்துள்ளதெனத் தற் காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை 1965 இல் ஏற்பட்ட 2·9 சதவீத அதிகரிப் புடன் ஒப்பிடலாம். மொ. தே. உ. இன் உண்மை நியதியின்படியான (அதாவது நிலையான 1959 விலைகளின்படி) அதிகரிப்பான 1.6 சதவீதமானது, 1965ம் ஆண்டினதைப்

போன்றே அமைந்து, அண்மை வருடங்களில் பெறப்பட்ட அதிகரிப்பு விகிதங்களில் ஆகக்குறைந்ததாக உள்ளது. ஏற்றுமதித்துறையிலே, ஏற்றுமதிகளின் பெறுமானம் 12·5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. ஏற்றுமதிக் கையிருப்புகள் அதிகரித்ததாக மதிப் பிடப்பட்டுள்ளது. ஏற்றுமதித்துறையின் தேறிய உற்பத்தியானது, கடந்த வருடத்தில் காட்டிய 2. 4 சதவீத அதிகரிப்பிற்கெதிராக 10·3 சதவீத வீழ்ச்சியை இவ்வருடத்தில் காட்டியுள்ளது.

ஏற்றுமதித்துறையின் நடத்தைக்கு எதிரான முறையில், உள்நாட்டுப் பாவிப்புக்கான பொருட்களினதும் சேவைகளினதும் உற்பத்தியில் ஒரு திருத்தம் ஏற்பட்டுள்ளது. உள் நாட்டுத்துறையிலே கடந்த வருடத்திலும் கூடிய விரிவு இருந்தது. 1965இல் 28·0 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருந்த நெல் உற்பத்தியானது, 1966இல் 28·1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதனுடன் சேர்ந்து, நுகர்வுக்கைத்தொழிற் பொருட்கள், மீன், போக்கு வரத்து, அரசாங்க சேவைகள் ஆகியவற்றின் உற்பத்திப் பெறுமானத்தில் ஏற்பட்டமிதமான அதிகரிப்புகள், உள்நாட்டுத்துறையின் தேறிய உற்பத்தியில் 4·7 சதவீத அதிகரிப்பை விளைவித்தன. 1965ற்கான தொடர்பான அதிகரிப்பு 2.7 சதவீதமாக உள்ளது.

1966இல் உண்மைத் தேசிய வருமானத்தின் வளர்ச்சி மேற் குறிப்பிட்டதனிலும் கூடியளவில் பின்போடப்பட்டது. ஏற்றுமதி விலைகளின் கூர்மையான வீழ்ச்சியினதும், இறக்குமதி விலைகளின் அதிகரிப்பினதும் விளைவாக இலங்கையினது வர்த்தகமாற்று விகிதமானது 13·1 சதவீதமளவில் பாதகமாகத் திரும்பிற்று. இதன் விளைவாக உண்மை உற்பத்தி மதிப்பீடுகள் வர்த்தகமாற்று விகிதமாற்றங்களிற்கு இடம் விட்டுக் கணிக்கப்பெ றின், உண்மைத் தேசிய வருமானமானது, 1966இல் 1.2 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. 1965ற்கான தொடர்பான மாற்றம் 2·0 சதவீதமான அதிகரிப்பாகும்.

சனத் தொகை பற்றிய தரவுகள், அதன் அதிகரிப்பு விகிதமானது 1965ற்கான 2. 4 சதவீதத்திலிருந்து 1966இல் 2.3 சதவீதத்திற்கு வீழ்ந்திருப்பதைக் காட்டுகின்றது. தனியாள் நியதியின்படியான நடைமுறை விலைகளின் படியான மொ. தே. உ. 1966இல் 1·0 சதவீதத்தால் வீழ்ந்துள்ளது. 1965இல் இது 0·6 சதவீதத்தால் உயர்ந்திருந்தது. நிலையான விலைகளின்படியான தனியாளிற்கான உற்பத்தி 0·7 சதவீதத்தால் வீழ்ச்சி யடைந்தது. கடந்த ஆண்டில் இதன் வீழ்ச்சி 0.6 சதவீதமாக இருந்தது. தனியாளிற்கான உண்மை வருமானம் இதனிலும் கூர்மையான வீழ்ச்சியான 3. 4 சதவீதத்தைப் பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டில் இது 0·4 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருந்தது.

நுகர்வு, மூலதன ஆக்கம் ஆகியவற்றின்படி அளவிடப்பட்ட மொத்தக் கேள்வி, 1966இல் அதிகரிப்பைக் காட்டிற்று. நுகர்வு 5·5 சதவீதத்தினாலும், மூலதன ஆக்கம் 8. 4 சதவீதத்தினாலும் அதிகரித்தது. மொத்தக்கேள்வி 5·9 சதவீதத்தினால் அதிகரித் தது. நிலையான மூலதன ஆக்கத்தின் அதிகரிப்பானது அரசாங்கத்துறை, தனியார் துறை இரண்டிலும் ஏற்பட்டிருந்தபோதும், தனியார் துறையிலேயே அதன் அதிகரிப்பு அழுத்தமாக அமைந்தது. இது சந்தேகமின்றி, கடந்த வருடங்களிலும்பார்க்கக் கூடிய வெளிநாட்டு செலாவணி ஒதுக்கீடுகளை தனியார் துறை இவ்வருடம் பெற்றதையே பிரதி பலிக்கின்றது. தேசிய உற்பத்தி மெதுவான அதிகரிப்பை மட்டும் காட்டிய ஒரு சந்தர்ப் பத்திலே ஏற்பட்ட நுகர்வினதும், மூலதன ஆக்கத்தினதும் அதிகரிப்பானதை, இலங் கைச் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் கணிசமானளவு குறையை ஏற்படுத்தியே பெறமுடியுமாயிற்று. இச் சென்மதி நிலுவைக்குறைக்கான நிதியீட்டம் ஓரளவு அந்நிய உதவிகளிலிருந்து பெற்ற வரவுகளிலிருந்தும், ஓரளவு நாட்டினது வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களைப் பயன்படுத்தியுமே செய்யப்பட்டது.

மேற்காணப்படும் ஆய்விலிருந்து வெளிப்படும் பொதுவான தோற்றம் யாதெனில், அது போதிய அளவிலமையா வளர்ச்சியே. உண்மை நியதிகளின் படியான மொத்தத்

தேசிய உற்பத்தியில், 1965இலும், 1966இலும் ஏற்பட்ட அதிகரிப்புகள் போதாதனவாக இருந்தது மட்டுமன்றி, சனத்தொகை அதிகரிப்பு விகிதம் 1966 இல் குறைந்திருந்த போதிலும்கூட இம் மொ. தே. உ. அதிகரிப்பு விகிதத்திற்கேற்ப ஒத்தும் அமையவில்லை. 1965இல் பெறப்பட்ட திருப்தியற்ற நிலைமைக்கு பெருமளவில் உதவிய காரணிகளாக, தேங்காய், நெல் உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. 1966இல் நெல் உற்பத்தியானது, 1964 இல் அடைந்த அதன் நிலையை அடைய முடியாது போனது மட்டுமன்றி, தேயிலை, தேங்காய் உற்பத்திகள் 1965இலும் குறைவாக இருந்தன. இக்காரணிகள் யாவும் உற்பத்தியின் மேல் விளைவித்த பாதகமான விளைவுகளை, அதிகரித்த தேசிய முயற்சிகளினால் ஓரளவிலாவது தேற்றியிருக்க முடியும்.

## (2) 1966-ஆம் ஆண்டின் நிதி, நாணய அபிவிருத்திகள்

1965ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில், பணநிரம்பலின் விரிவானது தடுத்து நிறுத்தப்பட்டிருந்தாலும் பொருட்களினதும் சேவைகளினதும் நிரம்பல்களானது (உள்நாட்டினதும் இறக்குமதியானவையும்) இக்குறைந்த பணநிரம்பல் விரிவிற்குக் கூட, வேண்டிய அளவில் அமையவில்லையென்பது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. 1966இல் உள்நாட்டுத்துறையின் திருந்திய நடத்தையினாலும், கூடியளவில் பெறப்பட்ட வெளிநாட்டு உதவிகளின் உட்பாய்வின் மூலமும், வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை பயன்படுத்தியதன் மூலமும் இயலுமாகவிருந்த இறக்குமதிகளின் அதிகரித்தளவு வரவாலும், (பொருட்களினதும், சேவைகளினதும்) நிரம்பல்கள் அதிகரித்தன.

ஏற்றுமதி வருவாய்கள் கணிசமானளவு வீழ்ச்சியுற்ற நேரத்திலே, நிரம்பல்களின் அதிகரித்த இக் கிடைப்பனவு ஏற்பட்டமையால், உள்நாட்டுத் துறையின் அதிகரித்த உற்பத்தியினிற்கும், அதிகரித்த இறக்குமதிகளினிற்கும் வேண்டிய நிதியீட்டத்திற்குக், கொடுகடனின் விரிவு அவசியமாயிற்று. எனவே தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ரூ. 937 இலட்சம் கொண்ட விரிவைப் பதிவுசெய்திருக்க, அரசாங்கத்துறையின் தொழிற்பாடுகளும் பெருமளவு விரிவு விளைவை ஏற்படுத்தியுள்ளன.

அரசாங்க, தனியார் துறைகளில் விரிவுத்தன்மை வாய்ந்த நிதியீட்டம் அமைந்ததெனினும், ஏற்றுமதி வருவாய்களின் கணிசமானளவு வீழ்ச்சி, தாபனங்களாற் செய்யப்பட்ட சேமிப்புகளின் அதிகரிப்பு ஆகிய காரணிகளாலேயே, பெரும்பாலும் மிதமான பணநிரம்பற் சுருக்கம் ஏற்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியினால் அளவிடப்பட்டபடியான விலைகள் 1965இல் 112. 5 புள்ளிகளிலிருந்து 1966இல் 112. 3 புள்ளிகளாக நுண்ணியளவு குறைந்தன. இக்குறிகாட்டியானது, அதன் அமைப்பின் விரிவு கொழும்பிலுள்ள தொழிலாளர் குடும்பங்களின் வாழ்க்கைச் செலவின் மாற்றங்களை மட்டுமே அடக்குவதால், பொருளாதாரம் முழுவதற்குமான விலை மாற்றங்களைப் போதியளவிற் பிரதிபலிப்பதில்லை. வருடத்தின் சில காலப்பகுதிகளின்போது அத்தியாவசியப் பொருட்களில் இடையிடை தட்டுப்பாடுகள் ஏற்பட்ட போதும், வருடம் முழுவதற்குமான நிரம்பல் நிலைமை முந்திய வருடத்தினதிலும் திருப்திகரமாக அமைந்தது. இடத்துடன் மிதமான பண நிரம்பற் சுருக்கமும் சேர்ந்து விலை மட்டத்தின் மீதான அமுக்கத்தைக் குறைத்திருக்க வேண்டும். விலைகள் இலேசாகத் தளர்ந்தமைக்கு (விசேடமாக ஆடைகளினதும், சில உணவுப் பொருட்களினதும்) சில ஆதாரங்கள் இருந்தன. கீழ்த் தொடரும் பந்திகளில் 1966இல் ஏற்பட்ட பண-நிதி நிலைமை விருத்திகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

### (அ) அரசாங்க வரவு செலவுத்திட்டம்

1965/66 நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டமானது ரூ. 836 இலட்சம் கொண்ட தேறிய விரிவுத் தாக்கத்தை விளைவிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும்

ஏற்பட்ட தேறிய விரிவுத்தாக்கமானது, ஈற்றில் 1964/65 இலான ரூ. 347 இலட்சத்திற் கெதிராக ரூ. 1224 இலட்சமாக அமைந்தது.

அரசிறைச் சேர்க்கைகள் எதிர்பார்த்ததிலும் குறைவாக அமைந்தன. தற்காலிக மதிப்பீடுகளின்படி அரசிறைச் சேர்க்கைகள், மூலமதிப்பீடாகிய ரூ. 18978 இலட்சத்திற்கும் முந்திய வருடத்து உண்மை அரசிறையாகிய ரூ. 18164 இலட்சத்திற்கும் எதிராக ரூ.18332 இலட்சமாக இருந்தன. 1965/66இற்கான அரசிறைச் சேர்க்கைகள் 1964/65இனை திலும் பார்க்க ரூ. 168 இலட்சம் அல்லது 0 .9 சதவீதம் மட்டுமே கூடுதலாக உள்ளன. இந் நுண்ணியளவான அதிகரிப்பு கடந்த ஐந்து நிதி வருடங்களின்போது எய்தப்பட்ட, வரு டாந்தமாக 4 சதவீத அரசிறை அதிகரிப்பு விகிதத்திற்கு முரணான முறையில் அமைந் துள்ளது. அரசிறையில் ஏற்பட்ட இவ்வதிகரிப்புக் குறைவாக அமைந்ததற்கு, அதிகரித்த வருமான வரி, உள்நாட்டு வரி வருமானங்களால் ஓரளவு தேற்றப்பட்ட இறக்குமதி, ஏற்றுமதி வரிச் சேர்க்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்புகள் குறைவாக அமைந்தமையே பெருமளவு காரணமாகும்.

1965/66 இல் மொத்த வாக்களிக்கப்பட்ட செலவாகிய ரூ. 23882 இலட்சம், மூல மதிப்பீட்டுத் தொகையாகிய ரூ.24049 இலட்சத்திலும் ரூ. 167 இலட்சத்தால் குறைந்து இருந்தது. வாக்களிக்கப்பட்ட செலவிலேற்பட்ட இக்குறைவு, மீண்டெழும் வாக்குப்பணங் களின் மீதான அதிகரிப்பாகிய ரூ. 337 இலட்சத்தால் தேற்றப்பட்ட மூலதன வாக்கு களின் மீதான ரூ. 504 இலட்சம் கொண்ட குறைசெலவாலேயே ஏற்பட்டது. ஆயினும் 1963/64, 1964/65 ஆண்டுகளில் இருந்த முறையே 2·2 சதவீத, 15·6 சதவீத மூலதன வாக்குப் பணங்களிற் பதியப்பட்ட குறை செலவானது, 1965/66 இல் 8. 7 சதவீதமாக மட்டுமே இருந்தது, முக்கியமாகக் கவனித்தற்குரியது. ரூ. 6324 இலட்சமாக நின்ற மூல தனச் செலவானது, (மீண்டெழும் வாக்குப் பணங்களிலுள்ள மூலதன விடயங்களும், வரவு செலவுத்திட்டத்திற்குட்படா நிதிகளிலிருந்து அறவிடப்படும் செலவும் உட்பட) இதுவரை அரசாங்கத்தால் எய்தப்பட்ட ஆகக்கூடிய மூலதனச் செலவுத் தொகையா வும், 1964/65க்குரிய தொடர்பான தொகையிலும் பார்க்க ரூ. 522 இலட்சம் கூடுத லான தொகையாகவும் உள்ளது. இம் மூலதனச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு, பிர தானமாக, உண்மை இருப்புச் சொத்துக்களின் கொள்ளல், ஆக்கம், பராமரிப்பு பேரி லேயே ஏற்பட்டது. இதன் மீதானசெலவு, இதுவரைக்குமான ஆகக்கூடிய செலவுத் தொகையான ரூ. 5918 இலட்சமாகவும், 1964/65ற்கான தொடர்பான தொகையிலும் ரூ. 447 இலட்சம் கூடியும் அமைந்துள்ளது. இது 1965/66இல் அரசாங்க நிதித் தொழிற்பாடுகளின் மிகத் திருப்திகரமான அம்சமாக விளங்குகின்றது.

ரூ. 17920 இலட்சம் கொண்ட அரசாங்கத்தின் நடைமுறைச் செலவானது 1964/65இற் குரியதிலும் ரூ. 601 இலட்சம் அல்லது 3. 5 சதவீதத்தால்உயர்ந்து உள்ளது. முந் திய நிதி வருடத்தில் நடைமுறைச் செலவில் ரூ. 217 இலட்சம் கொண்ட வீழ்ச்சி ஏற் பட்டிருந்தது. எனினும் 1965/66 இல் ஏற்பட்ட இவ்வதிகரிப்பானது 1956/57 தொட்டு 1965/66 வரையுள்ள பத்துவருடகாலப்பகுதியில் நடைமுறைச் செலவிலேற்பட்ட வரு டாந்த அதிகரிப்பு விகிதத்திலும் குறைவாகவே இருந்தது.

1965/66 நிதி வருடத்திற்கான மொத்த வரவு செலவுத்திட்டக்குறை ரூ. 6495 இலட்சமாக உள்ளது. ஆழ்நிதி உதவு தொகைகளிற்கும், முற்பணக் கணக்குத் தொழிற் பாடுகளிற்கும் இடம்விட்டுக் கணிக்கப்பட்டபின் பெறப்படும் தேறிய பணக்குறை ரூ. 5659 இலட்சமாக இருந்தது. முந்திய வருடத்திற்குரிய தொடர்பான தேறிய பணக்குறை 4304 இலட்சமாக உள்ளது. 1965/66 இல் ஏற்பட்ட தேறிய பணக்குறையின் அதிகரிப் பிற்கு, ஓரளவு கூடிய அரசிறையாற் தேற்றப்பட்ட கணிசமானளவு நடைமுறை, மூலத னச் செலவு அதிகரிப்புகளே காரணமாகும். அட்டவணை I-1 இற் காட்டப்பட்டுள்ளது

போல, தேறிய பணக்குறைக்கு நிதியீட்டம் செய்வதில், சென்ற வருடத்திலும் பார்க்க, அரசாங்கம் இவ்வருடம் வங்கித்தொழில் முறையிலிருந்து கூடியளவு கடனைப் பெற்றிருந்தது. வங்கித்தொழில் முறையிலிருந்து (பிரதானமாக மத்திய வங்கியிடமிருந்து) பெற்ற கடன்பாடு 1964/65இற்கான ரூ. 177 இலட்சத்திலிருந்து 1965/66இல் ரூ. 1623 இலட்சத்திற்கு உயர்ந்தது. அந்நிய நிதியை உள்ளடக்கிய வங்கிகளல்லா மூலங்களிலிருந்து செய்யப்பட்ட நிதியீட்டமானது ரூ. 3932 இலட்சத்திலிருந்து ரூ. 4860 இலட்சத்திற்கு அதிகரிக்க, இணைக்கிணை நிதிகளை உள்ளடக்கிய பணமிச்சங்கள் ரூ. 824 இலட்சத்தால் அதிகரித்தன. ஐக்கிய அமெரிக்க உதவி இணைக்கிணை நிதிகளும் ரூபா. 425 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன.

**அட்டவணை I — 1**

குறையின் நிதியீட்டம் 1961/62 முதல் 1965/66 வரை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மூலம் | 1961/62 | 1962/63 | 1963/64 | 1964/65 | 1965/66 (தற்காலிகமானவை) |
|---|---|---|---|---|---|
| 1. நிதியீட்டம் வங்கிகளல்லாத மூலங்களிலிருந்து (மொத்தம்) அதில் | **269·7** | **213·2** | **301·1** | **393·2** | **486·0** |
| (அ) உள்நாட்டுச் சந்தைகளல்லாக் கடன்பாடு | **104·5** | **–33·8** | **–1·9** | **50·3** | **112·1** |
| (ஆ) வங்கிகள் அல்லாத மூலங்களிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு | **109·4** | **153·5** | **207·6** | **243·2** | **255·9** |
| (இ) அந்நிய கடன்களும் நன்கொடைகளும் | **55·8** | **93·8** | **95·4** | **99·7** | **118·0** |
| 2. வங்கித்தொழில் முறையிலிருந்து உள்நாட்டுக் கடன்பாடு | **226·6** | **178·1** | **115·2** | **17·7** | **162·8** |
| 3. அரசாங்கப் பண மிச்சங்களினதும் பொருளுதவி இணைக்கிணை நிதிகளினதும் உபயோகம். | | | | | |
| (அ) பண மிச்சங்கள் | **–40·2** | **0·4** | **45·4** | **19·5** | **–47·2** |
| (ஆ) பொருளுதவி இணைக்கிணை நிதிகள் | — | — | — | — | **–35·2** |
| 4. நிகரப் பணக்குறையின் மொத்தம். | **456·1** | **391·7** | **461·7** | **430·4** | **565·9** |
| 5. அமெரிக்க உதவி இணைக்கிணை நிதிக் கணக்குகளின் மாற்றங்களுக்கேற்ற சீராக்கம் | **4·0** | **–16·5** | **2·3** | **–2·5** | **42·5** |
| 6. அரசாங்க நிதித்தொழிற்பாடுகளின் தேறிய விரிவுத்தாக்கம் (2+3+5) | **190·4** | **162·0** | **162·9** | **34·7** | **122·4** |

1965/66 நிதி வருடப்போதான தேறிய பணக்குறையானது 1964/65இனதிலும் பார்க்க ரூ. 1355 இலட்சத்தால் அதிகமாக உள்ளது. எனினும் அரசாங்க நிதித்தொழிற்பாடுகளின் விரிவுத்தாக்கம், முந்திய வருடத்தினதிலும் பார்க்க ரூ. 877 இலட்சத்தால் மட்டுமே கூடுதலாக உள்ளது. இதற்கு வங்கிகளல்லா உள்நாட்டு மூலங்களிலிருந்தும், அந்நிய நிதியிலிருந்தும் அரசாங்கமானது, அதிகரித்த தொகைகளைப் பெறக்கூடியதாயிருந்ததே காரணமாம். அதே நேரத்தில் அரசாங்கம் தனது பணமிச்சங்களையும் அதிகரித்துள்ளது. இவ்வருட நிதி நிலைமையில் உள்ள ஒரு புதிய அம்சம், மத்திய வங்கியிடம் உள்ள விசேட இணைக்கிணை நிதியில் இருந்த அரசாங்கப் பண மிச்சங்க

ளின் வளர்ச்சியாகும். இப்பணமிச்சங்கள் ரூ. 352 இலட்சத்தால் அதிகரித்தன. இவை அந்நியப் பொருளுதவி வரவுகளிலிருந்து எழும் இணைக்கிணை நிதிகளைக் கொண்டதாகும்.

1965/66 வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது செய்யப்பட்ட நிதியீட்ட எதிர்ப்பார்ப்புகள், அந்நிய உதவி மூலம் ரூ. 1750 இலட்சம் கிடைக்குமெனக் கணித்தன. உண்மையில் கிடைத்த வரவுகள் மிகவும் குறைவாக, ரூ. 1539 இலட்சமாக அமைந்திருப்பினும், இது வரை வரவு செலவுத்திட்டத்திற்காக பெறப்பட்ட அந்நிய கடன்களினதும் நன்கொடைகளினதும் வரவுகளின் ஆகக் கூடிய தொகையாக இத்தொகை அமைகின்றது. மதிப்பிடப்பட்ட வெளிநாட்டுதவி உண்மையிற் கிடைத்திருப்பின், வரவு செலவுத்திட்டத்தின் விரிவுத்தாக்கத்தினை எதிர்பார்க்கப்பட்ட நிலையான ரூ. 800 இலட்சம் அளவில் மட்டுப்படுத்தியிருக்கலாம்.

செத்தெம்பர் 1966இல் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதான 1966/67ற்கான வரவு செலவு திட்டமதிப்பீடுகளின்படி ரூ. 6852 இலட்சம் கொண்ட குறை எதிர்பார்க்கப்பட்டது. இக்குறைக்கு உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடுகளின் மூலம் ரூ. 3250 இலட்சமும், வெளிநாட்டு (திட்ட) உதவி மூலம் ரூ. 1250 இலட்சமும், நிருவாகக் கடன்பாடுகளின் மூலம் ரூ. 250 இலட்சமும் பெற்றும், ரூ. 1500 இலட்சம் கொண்ட இணைக்கிணை (பொருளுதவி) நிதிகளை உபயோகப்படுத்தியும் நிதியீட்டம் செய்யப்படவுள்ளது. எனவே விரிவுத் தன்மை வாய்ந்த மூலங்களிலிருந்து நிதியீட்டம் செய்வதற்கான மிகுதி ரூ. 602 இலட்சமாகும்.

அரசிறை மதிப்பீடுகளும், சில வேளைகளில் உண்மையில் பெறப்படாது இருக்க முடியுமென்பதற்கான அறிகுறிகள் உள்ளன. இதற்கு ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட கணிசமானளவு வீழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து ஏற்படும் ஏற்றுமதி வருவாய்கள், வருமானம் மீதிலான வரிகளின் வருமான வீழ்ச்சியுமே காரணமாகும். இதே நேரத்தில் உண்மையான செலவு, மதிப்பீடுகளிலும் பார்க்க வெகு குறைவாக அமையக்கூடும். இதற்கு உணவு மான்னியங்களில் செய்யப்படக்கூடிய சேமிப்புகளே பிரதான காரணமாகும். திசெம்பர் 18ம் தேதியன்று, அரசாங்கம் உணவு மான்னியத் திட்டத்தில் ஒரு மாற்றத்தினை அறிவித்தது. இதன்படி பங்கீட்டுக்கான (கூப்பனிற்கான) அரிசி வாரத்திற்கு இரண்டு படிகளிலிருந்து ஒரு படியாக வெட்டப்பட்டும், மாதம் ரூ. 1000 க்கு மேலான வரி வருமானத்தைக் கொண்ட வருமானவரி கொடுப்போர் மீது பங்கீட்டுப் புத்தகங்களை அவர்கள் திருப்பிக் கொடுக்காவிடின் மான்னியத்திற்குச் சமமான ஒரு வரி விதிக்கப்பட்டும் உள்ளது. வழங்கப்படும் ஒரு படி அரிசியானது பங்கீட்டுப் புத்தகத்தையுடையோருக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. முன்னர் இவர்களுக்கு வாரமொன்றிற்கு 25 சதவீதப்படி 2 படி அரிசி கொடுக்கப்பட்டது.

இந்நடவடிக்கையானது தேறிய உணவு மான்னியச் செலவை பல வழிகளில் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு இலவசப்படி அரிசியின் மீதான மான்னியமானது, 25 சதப்படி விற்கப்படும் 2 படி அரிசிகளின் மீதானமான்னியத்திலும் குறைவாக இருக்கும். கூப்பனில் விதிக்கப்படும் வெட்டானது பங்கீட்டுத்திட்டத்திற்கப்பாற்பட்ட உள்ளூர் அரிசியின் கேள்வியைக் கூட்டுவதாக அமையுமென்ற காரணத்தினால், அரசாங்க உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ்ச் செய்யப்படும் கொள்வனவுகள் குறைவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் அரிசிக்குப் பதில் கோதுமை மாவைப் பதிலீடாகப் பாவிக்க நுகர்வோர் முற்படும் போது, மாவின் விற்பனவுகள் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் நிமித்தம் மாவின் விற்பனையிலிருந்து அரசாங்கம் பெறும் இலாபங்கள் அதிகரிக்கும். இம்மாற்றம் புகுத்தப்பட்டபோது தேறிய உணவு மான்னியச் செலவில் எதிர்பார்க்கப்பட்ட சேமிப்பு கிட்டத்தட்ட ரூ 1400 இலட்சமாக இருந்தது.

எனினும் இம்மதிப்பீடானது எச்சரிக்கையுடன் உபயோகப்படுத்தப்பட வேண்டும். இது, ஏனெனில் இம்மதிப்பீடானது அரிசிக்குப்பதில் மாவின் உபயோகம், விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த அரிசியையே நுகர்வது, அரிசியின் வெளிச்சந்தை விலை ஆகியன பற்றிப் பாரதூரமான தற்கோள்களைச் செய்கின்ற காரணத்தினுலேயே. இம்மாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாக நெல்லினது வெளிச்சந்தை விலையில் கணிசமானளவு உயர்வும், மாவினது விற்பனையில் பெருமளவு அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளதாயினும், பெரும்போக அறுவடையின்பின் நெல்லினது வெளிச்சந்தை விலைகள், உத்தரவாத விலையிலோ அல்லது அதற்கண்மையாகவோ படிதல் வேண்டும்.

**(ஆ) தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன்.**

1966இல் தனியார் துறைக்கான மொத்த வர்த்தக வங்கிக் கொடுகடன், முந்திய வருடத்தின் ரூ. 42 இலட்சம் கொண்ட சிறு அதிகரிப்பிற்கு எதிராக, ரூ. 937 இலட்சத்தால் அதிகரித்தது. கூடிய வேகத்துடனுன உள்நாட்டுபொருளாதார இயக்கத்திற்கும், கூடிய அளவிலான இறக்குமதிகளுக்கும் நிதியீட்டுவதற்கு, தனியார்துறைக்கு கூடுதலாகக் கொடுகடன் தேவைப்பட்டது. வங்கி வைப்புக்களினதும், முற்பணங்களினதும் அளவையிலிருந்து புலப்பட்டுள்ளபடி, கைத்தொழில் தேவைகளுக்கான கடன்கள் ரூ. 509 இலட்சத்தால் அதிகரித்தும், விவசாயத்தேவைகளுக்கானவை ரூ. 57 இலட்சத்தால் அதிகரித்தும் உள்ளன. நுகர்வுத் தேவைகளுக்கான கடன்களும் ரூ. 105 இலட்சத்தால் அதிகரித்திருப்பினும், இவ்வதிகரிப்பு அதிகம் கூடிய அளவில் அமையாமலும், முந்திய வருடத்தினது அதிகரிப்பிலும் குறைவாகவும் உள்ளது. கைத்தொழில் தேவைகளுக்கான முற்பணங்களில் ஏற்பட்ட கணிசமானளவு அதிகரிப்பானது, 1966 இல் தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடனின் மிகவும் திருப்திகரமான அம்சமாக உள்ளது. தனியார் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பை அட்டவணை I-2. சுருக்கமாகத் தருகின்றது.

**அட்டவணை I — 2**

தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகள்

வழங்கிய முற்பணங்கள்.

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | திசம்பர் முடிவில் 1964 | 1965 | 1966 | மாற்றம் 1965/66 |
|---|---|---|---|---|
| (அ) திரட்டப்படும் நிலையிலுள்ள பண விடயங்கள்.* | 74·5 | 71·1 | 107·1 | + 36·0 |
| (ஆ) உள்நாட்டு உண்டியல்கள். ... | ... | ... | ... | ... |
| (இ) இறக்குமதி உண்டியல்கள். ... | 48·6 | 49·7 | 36·9 | — 12·8 |
| (ஈ) ஏற்றுமதி உண்டியல்கள். ... | 53·6 | 47·1 | 52·4 | + 5·3 |
| (உ) மேலதிகப் பற்றுகள். ... | 372·3 | 383·0 | 391·9 | + 8·9 |
| (ஊ) கடன்கள். | 279·4 | 281·7 | 338·1 | + 56·4 |
| மொத்தம் ... | 828·5 | 832·7 | 926·4 | + 93·7 |

* திரட்டப்படுவதற்காக அனுப்பப்பட்ட காசோலைகளினுல் பிரதிபலிக்கப்படும் சிறு அளவான வங்கிகளிடையான கடனை மட்டுமே, இத்தொகுதி கொண்டுள்ளது. உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்களின் கொள்வனவுகளின் நிதியீட்டத்திற்கென கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் மிகக் குறுந்தவணை முற்பணங்களையே இத்தொகுதி பிரதானமாகக் கொண்டுள்ளது.

1966-இல் கடன்களும், மேலதிகப்பற்றுகளும் 1965-இல் காட்டிய சிறு அதிகரிப்பாகிய ரூ. 130 இலட்சத்திற்கெதிராக, ரூ. 653 இலட்சத்தால் அதிகரித்தன. தனியார் துறைக்கான இக்கொடுகடன் விரிவு பெப்புருவரி, ஒகத்து ஒற்ரோபர், நவெம்பர் மாதங்கள் தவிர்த்து வருடமுழுவதிலும் ஏற்பட்டது.

**(இ) பண நிரம்பல்.**

1958இல் ஆரம்பித்து நடைபெற்று வந்த தொடர்ச்சியான விரிவின் பின், 1966 இல் பண நிரம்பலானது ரூ. 568 இலட்சம் அல்லது 3. 3 சதவீதத்தால் ரூ. 16589 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது. இது முந்திய வருடத்தின் ரூ. 939 இலட்ச அல்லது 5. 8 சதவீத அதிகரிப்பிற்கெதிராக அமைகின்றது. அட்டவணை I-3, 1966இல் பண நிரம்பலின் வீழ்ச்சிக்குதவிய காரணிகளைச் சுருக்கித் தருகின்றது.

**அட்டவணை I—3**

**பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றம்.**

(1965, திசெம்பர் இறுதி முதல் 1966 திசெம்பர் இறுதிவரை)

பத்து இலட்சம் ரூபாய்களில்.

| | | |
|---|---|---|
| **விரிவுக் காரணிகள்** | | |
| (அ) வங்கித் தொழில்முறையிலிருந்து அரசாங்கக் கடன்பாடு | 118. 1 | |
| (ஆ) தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் | 68. 4 | |
| (இ) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் | 20. 1 | |
| (ஈ) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினது தவணை, சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட குறைவு | 50 ·2 | |
| (உ) மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்களிலும் கணக்குகளிலும் (தேறிய) ஏற்பட்ட குறைவு. | 25. 2 | 282.0 |
| **சுருக்கக் காரணிகள்** | | |
| (அ) வங்கி வெளிநாட்டு இருப்புச்சொத்துக்களின் (தேறிய) வீழ்ச்சி | 196. 3 | |
| (ஆ) தனியார்துறை தவணை, சேமிப்பு வைப்புக்களின் அதிகரிப்பு | 67. 7 | |
| (இ) வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்களில் (தேறிய) ஏற்பட்ட அதிகரிப்பு | 12. 0 | |
| (ஈ) சீராக்கங்கள் | 0. 1 | |
| (உ) அரசாங்கப் பண மிச்சங்கள் | 62. 7 | 338.8 |
| பண நிரம்பலின் வீழ்ச்சி | | 56.8 |

1966 வருடப்போது ஏற்பட்ட பண நிரம்பலின் சுருக்கத்திற்கு உதவியாக இருந்த மிக முக்கிய காரணி வங்கி வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களில் ஏற்பட்ட ரூ. 1963 இலட்சம் கொண்ட வீழ்ச்சியே. இச்சுருக்க விளைவானது தனியார்துறை தவணை, சேமிப்பு வைப்புக்களின் ரூ. 677 இலட்சம் கொண்ட அதிகரிப்பினாலும், அரசாங்கப் பண மிச்சங்களின் ரூ. 627 இலட்சம் கொண்ட அதிகரிப்பினாலும் மேலும் வலுப்பெற்றது. பிற்கூறப்பட்டுள்ளதற்கு அரசாங்கத்தினது விசேட இணைக்கிணை ரூபா நிதிகளின் அதிகரிப்பே காரணம்.

1966-இல், முந்திய வருடத்தைப் போன்றே, வங்கித்தொழில் முறையிலிருந்ததான அரசாங்கக் கடன்பாடுகளே, பணநிரம்பலின் மிகப்பெரிய விரிவுக் காரணியாக அமைந்தன. 1966ல் வங்கித் தொழில்முறையிடமான அரசாங்கக்கடன்பாடுகளில் ரூ. 1181 இலட்சம் கொண்ட அதிகரிப்பொன்று ஏற்பட்டது. இவ்வதிகரிப்பானது மத்திய வங்கிக் கடன்பாட்டதிகரிப்பாகிய ரூ. 1823 இலட்சத்தையும், வர்த்தக வங்கிக் கடன்பாட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியாகிய ரூ. 642 இலட்சத்தினையும் அடக்கும். வங்கித் தொழில்முறையோடான, அரசாங்க ஆதிக்கமுள்ள துறையின் (அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்) தொழிற்பாடுகளின், பணநிரம்பலின் மீதான விரிவுத் தாக்கம் ரூ. 703 இலட்சமாக அமைந்தது. இதனுள் ரூ. 502 இலட்சம் தவணை வைப்புக்களின் வீழ்ச்சி வடிவத்தில் ஏற்பட்டது. முந்திய வருடத்தில் கணிசமானளவு வீழ்ச்சியடைந்திருந்த எஞ்சிய தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக்கொடுகடன் 1966-இல் அதிகரித்து, பணநிரம்பலின் மீது ரூ. 684 இலட்சம் கொண்டதோர் விரிவு விளைவினைத் தோற்றுவித்தது.

சுருங்கக்கூறின் 1966-இல் பணநிரம்பலில், நாட்டினது சென்மதி நிலுவையின் பாதகமான போக்கிலிருந்து தோன்றிய வங்கிகளின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் வீழ்ச்சியாலேயே முக்கியமாக விளைவிக்கப்பட்ட, ஒரு சுருக்கம் ஏற்பட்டது. இச்சுருக்கக் காரணிக்கு உதவியாக, உதவித்திட்டங்களின் கீழ் பெறப்பட்ட இறக்குமதிகளைப் பிரதி பலிக்கும் இணைக்கிணை நிதிகளின் வரவுகளால் விளைந்த அரசாங்கப் பண மிச்சங்களின் அதிகரிப்பும், வங்கித் தொழில் முறையுடன் தவணை சேமிப்பு வைப்புக்கள் வடிவத்தில் கொள்ளப்பட்டு வந்த தனியார் துறையின் நிதி இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பும் அமைந்தன. இச்சுருக்கக் காரணிகள் பிரதானமாக வங்கித் தொழில்முறையிலிருந்ததான அரசாங்கக் கடன்பாட்டின் அதிகரிப்பினாலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கும், தனியார்துறைக்குமான வர்த்தக வங்கிக் கொடுகடனின் விரிவினாலும் ஓரளவு தேற்றப் பட்டன.

### 3. வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் - பிரச்சினைகளும் கொள்கைகளும்

#### (அ) 1966இல் வெளிநாட்டுக் கொடுப்பனவுகள்

ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட கூரிய வீழ்ச்சியால் கொணரப்பட்ட கடுமையான வெளிநாட்டுக் கொடுப்பனவுப் பிரச்சினைகள் பல 1966இல் தோன்றின. 1966ற்கான வெளிநாட்டுச் செலாவணி வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படும்போது ஏற்றுமதி வருவாய்கள், 1965இலிருந்த ரூ. 19090 இலட்சத்திலிருந்து 1966இல் ரூ. 18300 இலட்சமாக விழுமென எதிர்பார்க்கப்பட்டது. உண்மையில் நடந்ததென்னவெனில், ஏற்றுமதி வருவாய்களினது வீழ்ச்சி இதனிலும் கூர்மையாக அமைந்தது. அவற்றின் தொகை ரூ. 16740 இலட்சமாக அமைந்து, முந்திய வருடநிலையிலும் ரூ. 2350 இலட்சம் குறைவாகவும், 1966-ம் வெளிநாட்டுச் செலாவணி வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப் பட்டதிலும் ரூ. 1560 இலட்சம் குறைவாகவும் அமைந்துள்ளது. இவ்வேற்றுமதி வரவுகளின் வீழ்ச்சியே, பெரும்பாலும் வருடப்போது எழுந்த கொடுப்பனவுக் கஷ்டங்களைக் கொண்டு வந்தது.

1965-இன் சாதகமான சென்மதிநிலுவையின் விளைவாக, இலங்கை 1965-ம் ஆண்டு முடிவில் தனது மொத்த வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை (ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளால் தேற்றப்பட்டது) ரூ. 4076 இலட்சத்திற்கு அதிகரிக்க முடிந்தது. 1966-இல் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட கூர்மையான வீழ்ச்சியாலும், நடைமுறை, மூலதனக் கணக்குகளின் மீதான கொடுப்பனவுகளின் அதிகரிப்பினாலும், இலங்கை தனது மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களை கிட்டத்தட்ட ரூ. 1220 இலட்சத்தால் வீழ்த்த வேண்டி ஏற்பட்டது. மேலும் ரூ. 40 இலட்சம் கொண்ட தொகையினையும் அது ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளுக்கு என ஒதுக்கி வைத்தது. இலங்கை தனது குறுங்காலப் பொறுப்புக்களையும் ரூ. 750 இலட்சத்தினால் அதிகரிக்க வேண்டியும் ஏற்பட்டது.

மத்திய வங்கியின் சர்வதேச ஒதுக்கு நிதியானது 1965 முடிவில் ரூ. 2822 இலட்சமாக இருந்தது. இத்தொகையில் தீர்ப்பனவுக் கணக்கு நிலுவைகளை உள்ளடக்கிய திரவ இருப்புச் சொத்துக்கள் ரூ. 1805 இலட்சமாக இருந்தன. 1966-இன் போது ஒதுக்கு நிதியானது தொடர்ச்சியாகக் குறைவுற்று 1966 திசெம்பர் இறுதியின்போது ரூ. 1430 இலட்சமாக மட்டுமே நின்றது. இத் தொகையுள் தீர்ப்பனவுக் கணக்கு நிலுவைகளை உள்ளடக்கிய திரவ இருப்புச் சொத்துக்கள் ரூ. 427 இலட்சமாக மட்டும் இருந்தன. இக்குறைந்த நிலையானது 1965 ஏப்பிறல்-மே போது அடையப்பட்ட பரிதவிக்கும் குறைந்த நிலைகளிலிருந்து அவ்வளவு வேறுபட்டு இருக்கவில்லை. எல்லாமாக ரூ. 714 இலட்சம் தொகை (1) கொண்ட தேறிய கடன்களை, வெளிநாட்டுச் செலாவணியில் சர்வதேச நாணயநிதியிலிருந்து இலங்கை பெற்றும்கூட, சர்வதேச ஒதுக்கில் இக்கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வரவு செலவு திட்டத்தின்படி எதிர்பார்க்கப்பட்ட ("அந்நிய செலாவணி தேவையற்ற" உத்தரவுச் சீட்டுக்கள் ரூ. 300 இலட்சத்தினையும், திட்டமுறைப்படி உதவி ரூ. 1240 இலட்சத்தினையும் உள்ளடக்கிய) இறக்குமதிச் செலவு ரூ. 23890 இலட்சமாகும். "இச் செலாவணி தேவையற்ற" உத்தரவுச்சீட்டுக்களும், திட்டமுறைப்படியான உதவியும் நீக்கப்பெறின், ஆரம்பத்தில் எதிர்பார்த்த இறக்குமதிச்செலவு ரூ. 22340 இலட்சமாக இருக்கும். சென்மதி நிலுவை நிலைமையில் ஏற்பட்ட தொடர்ச்சியான சீர்குலைவும், இறக்குமதித்தேவைகளின் மறுமதிப்பீடொன்றும், இறக்குமதி ஒதுக்கீடுகள் ரூ. 21860 இலட்சத்திற்குக் குறைக்கப்படுவதை அவசியமாக்கின. உண்மையில், வருடப்போது வழங்கப்பட்ட உத்தரவுச்சீட்டுகளின் பெறுமானம், திருத்தியமைக்கப்பட்ட இவ்வொதுக்கீட்டிலும் ரூ. 1000 இலட்சம் குறைவாகவே இருந்தன.

ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்த ஒரு சந்தர்ப்பத்தில், இவ்வளவினதான இறக்குமதிச் செலவிற்கு வேண்டிய நிதியீட்டத்தை, இலங்கை தனது வெளிநாட்டு ஒதுக்குகளைக் குறைத்தும், அந்நிய உதவியைப் பயன்படுத்தியும், தனது குறுங்கால வெளிநாட்டுக் கடன்பாட்டைக் கூட்டியுமே செய்யமுடிந்தது. வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் ரூ. 1220 இலட்சத்தால் குறைந்தன. சர்வதேச புனருத்தாரண வங்கியின் மேற்பார்வையின் கீழ் ஏற்படுத்தப்பட்ட முதலாம் இரண்டாம் பொருளுதவித் திட்டங்களின் கீழான வெளிநாட்டுதவியானது 1966-லேயே கிடைக்க ஆரம்பித்தது.

---

(1) சர்வதேச நாணய நிதியில் இலங்கையின் உறுப்புரிமைப் பங்கு ரூ. 3713 இலட்சமாக ($ 780 இலட்சம்) உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து கொடுப்பனவு செய்யவேண்டி ஏற்பட்ட தங்க உதவு தொகையின் நிமித்தம், ச. நா. நி. இலிருந்து கடனெடுத்த மேலுமொரு தொகையாகிய ரூ. 190இலட்சத்தை இது உள்ளடக்காது.

முதலாவது பொருளுதவித்திட்டத்தின் கீழான பிணையங்கள் 1965இல் செய்யப்பட்டிருந்தாலும், ஒழுங்குமுறைகளை நிர்ணயிப்பதற்கான பேச்சு வார்த்தைகள் அவ் வருடத்தில் முற்றுப்பெறவில்லை. 1966-இல் இவை முற்றுப்பெற்று, இரண்டாவது பொருளுதவித்திட்டத்தின் கீழான பிணையங்களும் பெறப்பட்டு, உதவி மூலம் பெறப்பட்ட இறக்குமதிகளின் ஒழுங்கான உள்வரத்து ஆரம்பித்தது. வருடப்போது இரண்டு பொருளுதவித் திட்டங்களின் கீழும் ரூ. 1321 இலட்சம் பெறுமானம் கொண்ட இறக்குமதிகள் இலங்கை வந்தடைந்தன.

பழுதடைந்து செல்லும் சென்மதி நிலுவை நிலைமையின் நிமித்தமும், தனது ஸ்திரப்படுத்தற் திட்டத்தினிற்கு வேண்டிய ஆதரவை வழங்கும் முகமாகவும் இலங்கை, 1966 யூன் 15-ம் தேதி தொட்டு ஓராண்டு வரைக்குமான காலப்பகுதிக்கு வழங்குபடியான எதிர்காலத்தில் கைக்கொள்ளத் தயாரான இரண்டாவது ஒழுங்கு உடன்பாட்டைச் சர்வதேச நிதியுடன் ஒழுங்கு செய்துகொண்டது. முதலாவது உடன்பாட்டின் கீழான ஐக்கிய அமெரிக்க $ 75 இலட்சம் கொண்ட கடைசித் தவணைத் தொகையை இலங்கை எடுப்பனவு செய்யவில்லை. இரண்டாவது எதிர்காலத்தில் கைக்கொள்ளத்தயாரான ஒழுங்கு உடன்பாட்டின் நியமங்களின்படி இலங்கையானது சர்வதேச நாணயநிதியிலிருந்து ஐக்கிய அமெரிக்க $ 250 இலட்சம் கொண்ட வெளிநாட்டுச் செலாவணியை, தவணை அடிப்படையில் பெறும் உரிமையைப் பெற்றது. இத்தவணைத் தொகைகளாவன 1966-ம் ஆண்டு யூன் 15ற்கும் செப்தெம்பர் 14ற்குமிடையில் ஐக்கிய அமெரிக்க $ 75 இலட்சம், 1966 செப்தெம்பர் 15ற்கும் திசெம்பர் 14-ற்குமிடையில் ஐக்கிய அமெரிக்க $ 37·5 இலட்சம், 1966 திசெம்பர் 15ற்கும் 1966 மாச்சு 14ற்குமிடையில் ஐக்கிய அமெரிக்க $ 75 இலட்சம், 1967, மாச்சு 15ற்கும் யூன் 14ற்குமிடையில் ஐக்கிய அமெரிக்க $ 62·5 இலட்சம். இவ்வுடன்பாட்டின்படி 1966, யூன் 15 தொட்டு ஆண்டு முடிவு வரையுள்ள காலப்பகுதியில், முதல் மூன்று தவணைத் தொகைகளாக, இலங்கை ரூ. 893 இலட்சத்திற்குச் சமமான ஐக்கிய அமெரிக்க $ 187.5 இலட்சம் கொண்ட தொகையைக் கொள்வனவு செய்தது. இதே காலப்பகுதியில் சர்வதேச நாணய நிதியிலிருந்து இலங்கையால் செய்யப்பட்ட மீளக் கொள்வனவுகள் ரூ. 179 இலட்சம் தொகையுடையதாக இருந்தன.

அட்டவணை I—4 சென்மதி நிலுவையின் 1966-ம் ஆண்டு நிலைமையைக் கடந்த ஆண்டுகளுக்குரியவற்றோடு ஒப்பிட்டுச் சுருக்கமாகக் காட்டுகின்றது. 1966-ல் இலங்கையின் நடைமுறைக் கணக்கின் மீதான குறையானது, அண்மை வருடங்களின் ஆகக் கூடிய குறையாக அமைந்ததை இவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள தரவுகள் காட்டுகின்றன. இதனை, ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட கூரிய வீழ்ச்சியாலும் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் குறைப்பாலும், வெளிநாட்டுப் பொறுப்புக்களின் அதிகரிப்பாலும் செய்ய இயலுமாகவிருந்த மிகக் கூடிய இறக்குமதிக் கொடுப்பனவுகள் நிலையாலும் விளக்கலாம். இந்நடைமுறைக் கணக்கின் மீதான குறையாகிய ரூ. 3050 இலட்சமானது, தனியார் மூலதன தேறிய கொடுப்பனவுகளாகிய ரூ. 450 இலட்சத்துடன் சேர்ந்து, குறுந்தவணை, நெடுந்தவணை வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ரூ. 2280 இலட்ச அதிகரிப்பையும் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களில் ரூ. 1220 இலட்ச வீழ்ச்சியையும் விளைவித்தது.

1966-இல் இலங்கையினது சென்மதி நிலுவையின் பாதகமான மாற்றம், கடுமையான விதத்தில் அமைந்தது. வர்த்தக மாற்றுவிகிதம் 13·1 சதவீதத்தால் பாதகமாக மாறியும், ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 2350 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைப் பதிந்தும் உள்ளன. இவ்வீழ்ச்சியானது 1952 தொட்டு இதுவரைக்குமான வருடங்களில், வருடமொன்றில் ஏற்பட்ட வீழ்ச்சிகளில் கூடிய வீழ்ச்சியாக இருந்தது. 1952இனைப் பொறுத்தவரையில் அவ்வருடத்தினது ஏற்றுமதி வருவாய்களின் வீழ்ச்சியானது, முந்திய கொரியாப் போர் செழிப்பு வருடத்தில் ஏற்பட்ட ஏற்றுமதி வருவாய்களின் அசாதாரண

அதிகரிப்பை தேற்றும் விதமாகவே அமைந்தது. 1966-இல் ஏற்பட்ட ஏற்றுமதி வருவாய்களின் வீழ்ச்சியானது, 1965இன் உயர்ந்த நிலையெனக் கொள்ளக்கூடிய நிலையிலிருந்தே ஏற்பட்டதெனினும், 1958 தொட்டு பதியப்பட்ட வருவாய்களில் ஆகக் குறைந்த வருவாய்களாக 1966இன் ஏற்றுமதி வருவாய்களை ஆக்குமளவிற்கு, பெருமளவாக அமைந்தது. இதன் விளைவாக, வெளிநாட்டுதவியின் கிடைப்பனவு அதிகரித்திருந்தபோதிலும், தனது வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை ஆபத்தான குறை நிலைகளை அடையும் விதமாகப் பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கைக்கு ஏற்பட்டது.

**அட்டவணை 1—4**

இலங்கையின் சென்மதி நிலுவை 1961—1966

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966(அ) |
|---|---|---|---|---|---|---|
| 1. வணிகப் பொருட்கள் | | | | | | |
| ஏற்றுமதிகள் க. ஏ. பெ. ... | +1,707 | +1,763 | +1,708 | +1,767 | +1,909 | +1,674 |
| இறக்குமதிகள் கொ. கா. க. ... | —1,794 | —1,906 | —1,869 | —1,960 | —1,922 | —2,023 |
| வர்த்தக நிலுவை ... ... | — 87 | — 143 | — 161 | — 192 | — 13 | — 349 |
| 2. சேவைகள் ... ... | — 18 | — 4 | — 20 | — 7 | + 31 | + 7 |
| 3. நன்கொடைகள் ... ... | + 11 | + 7 | + 13 | + 40 | + 40 | + 37 |
| 4. நடைமுறைக் கணக்கு நிலுவை ... | — 94 | — 140 | — 168 | — 160 | + 59 | — 305 |
| **நிதியீட்டியவகை** | | | | | | |
| 5. தனியார் மூலதனம் | | | | | | |
| நீண்டகால ... ... | — 8 | — 2 | + 5 | + 1 | — 4 | — 15 |
| குறுகிய கால ... ... | + 14 | — | — 5 | — 9 | — 18 | — 30 |
| 6. அரசகரும மூலதனமும் வங்கி மூலதனமும் (ஆ) ... | | | | | | |
| (i) நீண்டகால வெளிநாட்டுப் பொறுப்புக்களின் தேறியமாற்றம் | + 19 | + 40 | + 75 | + 7 | + 36 | + 153 |
| (ii) குறுகிய கால வெளிநாட்டுப் பொறுப்புக்களின் தேறிய மாற்றம் ... | + 81 | + 44 | + 46 | + 59 | + 22 | + 75 |
| (iii) வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் மாற்றம் ... | + 10 | + 28 | + 42 | + 111 | — 89 | + 122 |
| ((iv) ஏனைய ... ... | — 2 | — | — | — | — | — 2 |
| பிழைகளும் தவறுகளும் ... ... | — 19 | + 31 | + 4 | — 8 | — 6 | + 2 |

(அ) தற்காலிகமானது

(ஆ) சக அடையாளம் இருப்புச் சொத்துகளின் வீழ்ச்சியையோ அல்லது பொறுப்புகளின் அதிகரிப்பையோ குறிக்கும்.

**(ஆ) வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் பற்றிய பிரச்சனைகள்.**

இலங்கையினது வெளிநாட்டு ஒதுக்கு நிதிகளைப் பலப்படுத்த வேண்டிய அவசியத்தை மீள உறுத்துவது அநாவசியம். 1965-இல் கூடிய இறக்குமதி ஒதுக்கீடுகள் கோரி எழுந்த அமுக்கங்கள் இருந்திருப்பினும், அவ்வருடத்தில் மிதமான முறையில் அதிகரிக்கப்பட்ட வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் குறைப்பின் மூலம் நிதியீட்டியே, உண்மையில் 1966-இல் ஏற்பட்ட அதிகரித்த தொகையான இறக்குமதிகளைப் பெற முடிந்தது. வெளிநாட்டுச் செலாவணிக் கிடைப்பனவுகளில் ஏற்படக்கூடிய எதிர்பாரா வீழ்ச்சிகளை ஈடு செய்வதற்கானளவு விதத்தில் கூட, 1966 முடிவில் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கு நிதிகள் தொகை அமைந்திருக்கவில்லை. மேலும் போதா அளவில் அமைந்த இவ் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கை,விசேடமாகச் சர்வதேச நாணய நிதியிடமிருந்து பெற்றன போன்ற அதிகரித்த வெளிநாட்டிலான குறுந்தவணைக் கடன்பாடுகளைக் கொண்டே, இந்நிலையில் வைத்திருக்கக் கூடியதாய் இருந்தது. இப்பொறுப்புகள் யாவும் ஆகக் கூடியது 5 வருட கால வரையறைக்குள் திருப்பிக் கொடுபட வேண்டியனவாகும். அப்படியாயின் அவற்றை, வெளிநாட்டு மூலதன உட்பாய்வுகள் அதி

கரித்தளவில் கிடைத்தாலொழிய, இறக்குமதிகளை வெட்டியே செய்யமுடியும். இச்சந்தர்ப்பத்தில், 1966-இல் மொத்த மூலதன உட்பாய்வும், குறுந்தவணை பொறுப்புக்களின் அதிகரிப்பும் ரூ. 4010 இலட்சமாகவும், வட்டிக் கொடுப்பனவுகள், முதற் கொடுப்பனவுகள் அல்லது முதல் அகல்வுகள், குறுந்தவணைப் பொறுப்புக்களின் குறைப்பு ஆகியன ரூ. 1880 இலட்சமாகவும் இருந்தது மனதிற் கொள்ளப்படுவது அவசியம்.

குறுந்தவணையின்போது, இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பதற்கான அறிகுறிகள் யாவும் ஊக்கமளிப்பதாயில்லை. தேயிலை, இரப்பர், தெங்கு விலைகள் உடனடியான வருங்காலத்தில், திருத்தம் காணக்கூடுமெனக் கொள்வதற்கு ஆதாரங்கள் இல்லை. அண்மை வருடங்களில் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ள தேயிலை உற்பத்தியும் 1966-இல் பிற்போடப்பட்டது. மறுபுறத்தில் இரப்பர் உற்பத்தியானது குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பு புனர்நடுகையிடப்பட்ட பரப்புகள் பல உற்பத்தி நிலைக்கு வர, வர, தொடர்ந்து அதிகரிக்கக்கூடும்.

1966-இல் தெங்கு உற்பத்தி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. எதிர் வருடங்களில் உற்பத்தி ஓரளவு அதிகரிக்குமெனக் கொள்ளப்பட்டாலும், அதிகரித்துச் செல்லும் சனத்தொகை நிமித்தம் உள்நாட்டு நுகர்ச்சியும் அதிகரிக்குமாகையால், ஏற்றுமதிக்குக் கிடைக்கும் உற்பத்திமிகை குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டாது இருக்கக்கூடும். ஏனைய ஏற்றுமதிப் பொருட்களை, குறிப்பாக சில கைத்தொழிற் பொருட்களைப் பொறுத்தமட்டில், அவை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பினும், ஏற்றுமதி வருவாய்களின் மீது அவை கொண்டு வரக்கூடிய தேறிய அதிகரிப்பு, உடனடியான வருடங்களில் பெருமளவில் அமையுமென எதிர்பார்க்க முடியாது. எனவே ஏற்றுமதி வருவாய்கள் கணிசமானளவு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறைவே. தற்போது பெறக்கூடியதான எதிர்கால மதிப்பீடுகளும் இம்முடிவை ஆதரிப்பதாகவே அமைந்துள்ளன.

எனவே இலங்கையின் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணின், இறக்குமதிகள் பக்கமே திரும்ப வேண்டியது அவசியமாகின்றது. இலங்கையானது விவசாயம், கைத்தொழில் இரண்டினைப் பொறுத்தமட்டிலும் இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையொன்றினைக் கடைப்பிடித்து வந்துள்ளது. அண்மையில் விவசாயத்துறையின் இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையே, கூடுதலாக வலியுறுத்தப்பட்டுள்ளது. உப உணவுப் பொருட்கள் அடங்கிய உணவு இறக்குமதிகள், மொத்த இறக்குமதிச் செலவில் 40லிருந்து 45 சதவீதத்திற்கு வகை கூறுகின்றன. உள்நாட்டு உணவு உற்பத்தி மூலம், ஒரு குறுகிய காலப்பகுதியில், இலங்கையின் உணவு இறக்குமதிகளைக் கணிசமானளவு குறைக்க முடியும். உலக சந்தையில் அதிகரித்து வரும் அரிசி நிரம்பல் தட்டுப்பாடு, உள்நாட்டிலான ஒரு தீவிர உணவு உற்பத்திப் பெருக்க இயக்கத்தின் அவசியத்தை வலியுறுத்த உதவுகின்றது. உண்மையில், உலக சந்தைகளிலிருந்து போதியளவு அரிசி நிரம்பல்களைப் பெறமுடியாததாலேயே அரிசிப் பங்கீடானது அரையளவாக்கப்பட்டது. அதிகரித்த உணவு உற்பத்தியானது, நிலத்தையும், நீரையும், கொடுகடனையும் கிடைக்கச் செய்தலிலும், திருந்திய உற்பத்தி, முறைகளைக் கையாளுதலிலும், கிராம நிலையில் வைத்தே அபிவிருத்தி, உற்பத்தித் திட்டங்களை ஒழுங்குபடுத்தலிலும் இணைப்பதிலுமே, பெருமளவிற் தங்கியுள்ளது. மேலும் இவ்வித முயற்சியானது வளமாக்கிகள், களை நீக்கிகள், இயந்திரக் கலப்பைகள் ஆகியனவற்றின் மீது செய்யவேண்டிய கூடுதலான வெளிநாட்டுச் செலாவணிச் செலவுகளையும் அடக்கும். ஆயினும் உணவு இறக்குமதிகளின் குறைப்பு மூலம் ஏற்படக்கூடிய வெளிநாட்டுச் செலாவணிச் சேமிப்பானது, கூடுதலான இவ்வெளிநாட்டுச் செலாவணிச் செலவுகளை மேலதிகமாக ஈடுசெய்யும்படியாக அமையும்.

22634

1960-லும் 1961-லும் கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கைத்தொழிலில் இறக்குமதிப் பதிலீடானது தொடர்ந்து நடைமுறையில் இருந்து வந்துள்ளது. 1966-இல் மூலப் பொருட்கள் அதிகரித்தளவில் கிடைக்கக்கூடிய தாயிருந்தமையால், உள்நாட்டு கைத்தொழில் உற்பத்தி வரவேற்கக்கூடிய அதிகரிப்பைக் காட்டிற்று. எனினும் கட்டுப்படுத்தப்பட்ட அளவிலான இக் கைத்தொழிற்கான வெளி நாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகள், நல்விதத்தில் பயன்படுத்தப்படுவதாயின், இக்கைத் தொழில்களோடு சம்பந்தமுடைய பல பிரச்சனைகள் ஆழ்ந்த கவனத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டியுள்ளன. கடுமையான இவ்விறக்குமதிக் கட்டுப்பாடுகள், அவசியமற்றனவெனக் கருதப்பட்டன. எனவே தவிர்க்கக்கூடிய இறக்குமதிகளையே கடுமை யாகத் தாக்கின. அவசியமான இறக்குமதிகளுக்கான வெளிநாட்டுச் செலாவணி ஒதுக் கீடுகள் தொடர்ந்தும் செய்யப்பட்டன. இதனால் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கள், இதுவரை இறக்குமதி செய்யப்பட்டதான அவசியம் குறைந்த பொருட்களின் உற்பத்திக்காகவே, பெருமளவில் எழ முடியுமாயிற்று.

இப்புதுக் கைத்தொழில்களால் உற்பத்தி செய்யப்படும் பல பொருட்கள், தேசியத் தேவைகளின் அவசியத்தின் நியமங்களின்படி ஒரு கடுமையான இறக்குமதிக் கட்டுப் பாட்டுத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டிருக்க மாட்டா. ஆயினும் இத்தொழில்கள் தாபிக்கப்பட்டதன் விளைவாக, அருமையாகக் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணி இவற்றிற்கு வேண்டிய பொறிகளையும், மூலப் பொருட்களையும் இறக்குமதி செய்யப் பயன்படுத்தப்பட்டது. அதேசமயத்தில் பொதுவான தட்டுப்பாட்டை, விசேடமாக இவ் அவசியமற்ற பொருட்களிலான தட்டுப்பாட்டைக் கொண்ட ஒரு சூழ்நிலையிலே, இறக்கு மதிப் பதிலீட்டுக் கைத்தொழிற் பொருட்களுக்கான கேள்வியானது அதிகரிக்க முயன் றுள்ளது. இதன் விளைவாக இவ்வதிகரித்த கேள்வியானது, வழக்கமாக இறக்குமதி செய்யப்பட்டிருக்க முடியாத நுகர்வுப் பொருட்களின் உள்நாட்டு உற்பத்திக்கு வேண்டிய வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுக்கொடுத்தது மட்டுமன்றி, மிக உயர்ந்த நிலை உற்பத்தி ஆற்றலுடன் இயங்கிவரும் இக்கைத்தொழில்களைத் தொடர்ந்திருக்கச் செய் வதற்கு ஆதரவாக வேண்டிய, இலங்கையினது வெளிநாட்டுச் செலாவணி வளங்களையும் விரயம் செய்வதாகவும் உள்ளது.

இக்கைத்தொழில்களிற் சில, முழுவதனே உள்நாட்டுப் பதிலீடுகளாக இருந்து வந்த பொருட்களை, தமது பொருட்களின் தீவிர விற்பனையினால் சந்தையிலிருந்து விரட்ட முயன்றுள்ளன. இப்படியான விதத்தில், சிறிதளவு அல்லது முற்றிலுமே இறக்குமதி களைத் தனது உற்பத்தியில் அடக்காத உள்நாட்டுப் பொருட்களுக்குப் பதிற் பொருட்களாக உயர்ந்த இறக்குமதி அடக்கம் வாய்ந்த உள்நாட்டுக் கைத்தொழிற் பொருட்கள், அசந்தர்ப்பமான இவ்வேளையில் அமைந்துள்ளன. இதுவும் அவசியமற்ற விதத்தில் வெளிநாட்டுச் செலாவணியைச் செலவிடுவதாகும். இவ்விறக்குமதிப் பதிலீட்டுக் கைத் தொழில்களின் வெளிநாட்டுச் செலாவணி அடக்கம் பற்றிய மதிப்பீடெதனும் இத்தொ ழிற் பொருட்களின் பாவனை நீடிப்பு குறைவு, தரக்குறைவு காரணமாக எழும் அதி கரித்த மொத்த விற்பனையையும் கணித்தே பெறப்படவேண்டும்.

இவையும், மற்றும் பல பிரச்சனைகளும் அண்மை வருடங்களில் தாபிக்கப்பட்ட இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களில் உள்ளன. இவ்விடத்தான நோக்கம், இப்பிரச்சனைகள் இருப்பதைச் சுட்டிக்காட்டுவதே. கைத்தொழில் அமைச்சு, கைத்தொழிற் கான வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகளுக்கு வேண்டிய சில தேவை அவசிய நியமங்களைக் கணிக்க முயன்றுள்ளது. இந் நடவடிக்கையானது வரவேற்கத்தக்க தொன் றனது. கைத்தொழிற்துறை முழுவதற்குமான தர்க்கரீதியான முறை ஒன்றை மேற்கொள் ளும் விதமாக இது தொடரப்பட வேண்டும். இப்படிச் செய்யின் கைத்தொழில்களுக்கு வேண்டிய அருமையான வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகளை தேசிய தேவை அவசிய நியமங்களின்படியும், ஆகக்குறைந்த செலவுடனும் செய்யமுடியும்.

அரசாங்கத் துறை உற்பத்தியில் பொதுவானதொரு திருத்தம் இருந்தது. சீமெந்து, பீங்கான் பொருட்கள், ஆடைகள், உப்பு, வெளிநாட்டுச் செலாவணியை மிச்சம் பிடிக்கத் தக்க ஏனைய கைத்தொழில்கள் ஆகியனவற்றின் உற்பத்தி அதிகரிப்பிற்கெனத் திட்டங்களிடப்பட்டுள்ளன. எஃகு, ரயர் கூட்டுத்தாபனங்களும் 1967-இல் உற்பத்தியை ஆரம்பிக்க உள்ளன. இங்கும் கூட, இக்கைத்தொழில்கள் இயலளவில் இயங்கக்கூடிய விதத்தில் போதியளவு வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குவதும், அதன் பின் ஒதுக்கப் பட்ட செலாவணி பொருளாதாரத்திற்கு கூடிய நற்பயனளிக்கும் விதத்தில் பயன்படுத் தப்படுகின்றதெனக் கண்காணித்துக் கொள்வதுமே பிரச்சினையாக உள்ளது.

## (4) முடிவுரை

1966-இல் பொருளாதார வளர்ச்சியானது, சனத்தொகை அதிகரிப்பிற்கு சமனாக அமையக்கூட போதியளவில் ஏற்படவில்லை. இலங்கையின் வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட பெரிய பாதகமான மாற்றத்துடன் இது இணைந்து, உண்மை வருமானத்தில் வீழ்ச்சியொன்றினை விளைவித்தது. நாணய நிலைமை நிலைதளம்பவிடாது வைத்திருக்கப் பட்டது. பணநிரம்பலில் சிறு சுருக்கமொன்று ஏற்பட்டது. இறக்குமதிகளினதும், உள்நாட்டிலுற்பத்தியான பொருட்களினதும் நிரம்பல்கள் கூடிய திருப்தியைத் தந்தன. இதன் விளைவாக உள்நாட்டு விலைகளின் மீதான அமுக்கம் சிறிது தளர்ந்தது. சென் மதி நிலுவை நிலைமை கவலைக்கிடமளிப்பதாயுள்ளது. விவசாயத்தில் இறக்குமதிப் பதிலீட் டின் பங்கினை, இயலுமானளவு விரைவில் கூட்டுவதற்கென நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. இறக்குமதிகளை மிச்சப்படுத்த, தனியார் துறையிலும், அரசாங்கத்துறை யிலுமுள்ள கைத்தொழில்கள் சிறிதளவிலாவது உதவுகின்றன. சென்மதி நிலுவைப் பிரச்சனைகளுக்கான தீர்வு, விவசாயத்திலும், கைத்தொழிலிலும் கடைப்பிடிக்கப்படும் இறக்குமதிப்பதிலீட்டுக் கொள்கைகளின் வெற்றியிலேயே தங்கியுள்ளது. அருமையான வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகள் ஆகக்கூடிய பயனையளிக்கும் விதமாகப் பயன் படுத்தப்படுகின்றனவா என நிச்சயம் செய்து கொள்வதில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.